10-12-2023 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 23.02.1997

## துணைவனை துணையாக வைத்துக் கொண்டு சாட்சி மற்றும் குஷியான சிம்மாசனதாரியாக இருங்கள்

இன்று விஸ்வ கல்யாணகாரி தந்தை உலகில் நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றார். அனைத்து குழந்தைகளின் அன்பு மற்றும் சகயோகத்தின் ரேகை குழந்தைகளின் முகத்தில் தென்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒவ்வொருவரின் உள்ளத்தில் என்னுடைய பாபா என்ற பாட்டு கேட்டுக் கொண்டிருக்கிறது. பாப்தாதாவும் கைமாறாக ஆஹா என்னுடைய மிகச் செல்லமான, மிகப் பிரியமான, அன்பாக குழந்தைகளே என்று கூறுகின்றார். ஒவ்வொரு குழந்தையும் பிரியமானவர்களாகவும் இருக்கிறீர்கள், செல்லமானவர் களாகவும் இருக்கிறீர்கள். ஏன்? கோடியில் சிலர் மற்றும் சிலரிலும் சிலராக இருக்கிறீர்கள். ஆக செல்ல மானவர்களாக ஆகிவிடுகிறீர்கள் அல்லவா! எனவே பாப்தாதாவும் செல்லமான குழந்தைகளைப் பார்த்து குஷியடைகின்றார். குழந்தை களும் குஷியில் நடனம் ஆடுவதைப் பார்க்கின்றார் மற்றும் சதா பார்க்க விரும்புகின்றார். குஷியாக இருக்கிறீர்கள், ஆனால் தந்தை சதா விரும்புகின்றார். சதா குஷியாக இருக்கிறீர்களா? அல்லது குஷியில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறதா? சில நேரம் அதிக குஷி, சில நேரம் குறைவு, சில நேரம் மிகக் குறைவாக இருக்கிறதா?

தந்தை முன்பே கூறியிருந்தார் - தனது முகத்தின் மூலம், கண்களின் மூலம், இரண்டு வார்த்தை களின் மூலம் ஒவ்வொரு ஆத்மாவின் துக்கத்தை தூரமாக்கி குஷி கொடுக்கும் சேவை இந்த நேரத்தில் அவசியமானதாகும். உங்களைப் பார்த்ததும் குஷியடைந்து விட வேண்டும். ஆகையால் குஷியான முகம் அல்லது குஷியான மூர்த்தியாக சதா இருங்கள். ஏனெனில் மனதின் குஷியானது முகத்தில் தெளிவாக தென்படும். சிலர் எவ்வளவு தான் குழப்பத் துடன், துக்க அலையுடன் வந்தாலும், குஷியாக இருப்பது இயலாத காரியம் என்று புரிந்து கொள்பவராக இருந்தாலும் உங்கள் முன் வந்ததும் உங்களது மூர்த்தி, உங்களது விருத்தி, உங்களது திருஷ்டியானது ஆத்மாவை மாற்றி விடும். இன்று மன மகிழ்ச்சிக்காக எவ்வளவு செலவு செய்கின்றனர்! மன மகிழ்ச்சிக்காக புதுப்புது சாதனங்களை உருவாக்குகின்றனர். அது அல்ப காலத்திற்கான சாதன மாகும். உங்களுடையது சதா காலத்திற்கான உண்மையான சாதனையாகும். எனவே சாதனை யானது அந்த ஆத்மாக்களை மாற்றி விட வேண்டும். ஐயோ ஐயோ என்று வருவார்கள், ஆஹா ஆஹா என்பதை எடுத்துச் செல்வார்கள். ஆஹா அதிசயம் - பரமாத்ம ஆத்மாக்களின்! எனவே இந்த சேவை செய்யுங்கள். காலம் செல்லச் செல்ல எந்த அளவிற்கு அல்ப கால சாதனங்களின் மூலம் குழப்பம் அடைந்து கொண்டே செல்வார்களோ, அப்படிப்பட்ட நேரத்தில் உங்களது குஷி அவர்களுக்கு உதவியாக இருக்கும். ஏனெனில் நீங்கள் குஷியானவர்கள். குஷியானவர்களா இல்லையா? அரைகுறையாக இல்லை தானே? குஷியானவர்களாகத் தான் இருக்கிறீர்கள். உங்களைப் போன்று குஷியானவர்கள் முழு கல்பத்திலும் எந்த ஆத்மாக்களும் கிடையாது. அந்த போதையானது முகம் மற்றும் நடத்தையின்

மூலம் அனுபவம் செய்வியுங்கள். செய்விக்க முடியுமா? அல்லது செய்வித்துக் கொண்டிருக்கிறீர்களா?

பிராமண வாழ்வில் குஷி இல்லையெனில் பிராமணன் ஆகி என்ன செய்தீர்கள்? பிராமண வாழ்க்கை என்றால் குஷியான வாழ்க்கை. சில நேரங்களில் சில குழந்தைகளின் முகம் சிறிது என்பதை பாப்தாதா பார்க்கின்றார். என்ன ஏற்படுகிறது? என்பதை நன்றாக அறிவீர்கள். அதனால் தான் சிரிக்கிறீர்கள். அப்படிப்பட்ட முகத்தைப் பார்த்து பாப்தாதாவிற்கு கருணையும் வருகிறது, சிறிது ஆச்சரியமும் ஏற்படுகிறது. என்னுடைய குழந்தைகள் உதாசீனமாக இருக்கிறார்கள். இருக்க முடியுமா என்ன? இல்லை அல்லவா! உதாசீனம் என்றால் மாயாவிற்கு அடிமை. ஆனால் நீங்கள் மாஸ்டர் மாயாபதி ஆவீர்கள். மாயை உங்கள் முன் என்ன? குருவியாகவும் கிடையாது, இறந்து போன குருவியாகும். தூரத்தி-ருந்து பார்க்கும் போது உயிருடன் இருப்பதாக தோன்றும், ஆனால் இறந்து விட்டது. தூரத்திலேயே கண்டறியும் சக்தி இருக்க வேண்டும். எவ்வாறு தந்தையின் ஞானம் விஸ்தாரமாக அறிவீர்கள் அல்லவா! அதே போன்று மாயாவின் பல வேடங்களையும் அறிந்து, ஞானத்தை நல்ல முறையில் தாரணை செய்யுங்கள். அது வெறுமனே பயமுறுத்துகிறது. சின்ன குழந்தையை பயமற்றவராக ஆக்குவதற்கு அதன் தாய், தந்தை பயமுறுத்துவார்கள். எதுவும் செய்யமாட்டார்கள், தெரிந்து கொண்டு பயமுறுத்துவதற்காக செய்வார்கள். அதே போன்று மாயாவும் தன்னுடையவராக ஆக்குவதற்கு பல வேடங்களை தாரணை செய்கிறது. பல வேடங்களை தாரணை செய்யும் போது நீங்களும் வேடதாரியாகி அதனை கண்டறியுங்கள். கண்டறிய முடியாமல் போகும் போது என்ன விளையாட்டு விளையாடுகிறீர்கள்? யுத்தம் செய்ய ஆரம்பித்து விடுகிறீர்கள் - ஐயோ, மாயை வந்து விட்டது. மேலும் யுத்தம் செய்வதனால் புத்தி, மனம் களைப்படைந்து விடுகிறது. களைப்படைந்த பிறகு என்ன கூறுகிறீர்கள்? மாயை மிகவும் பிரபலமானது, மாயை மிகவும் வேகமாக இருக்கிறது. அப்படி ஒன்றும் கிடையாது. உங்களது பலவீனம் மாயையின் விதவிதமான ரூபமாக ஆகிவிடுகிறது. ஆக பாப்தாதா ஒவ்வொரு குழந்தை யையும் சதா குஷியானவர் என்ற போதை, குஷியான முகம் மற்றும் குஷி என்ற சத்தான உணவு மூலம் ஆரோக்கியமானவர்களாக மற்றும் சதா குஷி என்ற பொக்கிஷம் நிறைந்தவர்களாக பார்க்க விரும்புகின்றார். வாழ்க்கைக்கு என்ன தேவை? உணவு மற்றும் பொக்கிஷம். வேறு என்ன தேவை? உங்களிடம் குஷி என்ற உணவு இருக்கிறதா? அல்லது சில நேரம் இருப்பு தீர்ந்து விடுகிறதா? குஷியின் பொக்கிஷம் அழிவற்றதாகும். அழிவற்று இருக்கிறது தானே? எவ்வளவு செலவு செய்வீர்களோ அவ்வளவு அதிகரிக்கும். வேறு எந்த முயற்சி செய்யாவிட்டாலும் பரவாயில்லை, இந்த ஒரு முயற்சி செய்யுங்கள் - எது நடந்தாலும், தனது மன ஸ்திதியின் முலமாகவோ, பிற ஆத்மாக்களின் மூலமாகவே, இயற்கையின் மூலமாகவே, சூழ்நிலையின் மூலமாகவோ எது வேண்டுமென்றாலும் நடக்கட்டும். ஆனால் நான் குஷி இழக்கக் கூடாது. இது எளிய முயற்சி அல்லவா அல்லது குஷி இழந்து விடுகிறீர்களா? எளிதா? அல்லது அவ்வபோது கடினமாக இருக்கிறதா? திட சங்கல்பம் வையுங்கள், மற்ற விசயங்களை மறந்து விடுங்கள். நான் குஷியாக இருக்க வேண்டும் என்ற ஒரு விசயத்தில் பக்காவாக இருங்கள். பிறகு விசயங்கள் எப்படி தோன்றும்? விளையாட்டு. மேலும் நீங்கள் உங்களது விளையாட்டை பார்ப்பதற்கு சாட்சி என்று இருக்கையில் சதா நிலைத்திருங்கள்.

அவமானம் செய்பவர்களாக இருக்கட்டும், உங்களை குழப்பத்தில் கொண்டு வந்து உங்களது சாட்சி நிலையி-ருந்து கீழே இறக்குபவர்களாக இருக் கட்டும், ஆனால் நீங்கள் தனது சாட்சி என்ற இருக்கையி-ருந்து கீழே வராதீர்கள். கீழே வந்து விடுகிறீர்கள், அதனால் தான் குஷி குறைந்து விடுகிறது.

பாப்தாதா முன்பே இரண்டு வார்த்தைகளை கூறியிருக்கின்றார் - துணை மற்றும் சாட்சி. பாப்தாதா துணையாக இருக்கும் போது சாட்சி என்ற இருக்கை சதா உறுதியாக இருக்கிறது. பாப்தாதா துணையாக இருக்கின்றார், பாப்தாதா துணையாக இருக்கின்றார் என்று அனைவரும் கூறுகிறீர்கள். ஆனால் துணையாக இருப்பவரை சரியான நேரத்தில் பயன்படுத்திக் கொள்வது கிடையாது, தூரமாக்கி விடுகிறீர்கள். சிலர் கூடவே இருப்பார்கள், ஆனால் ஏதாவது ஒரு வேலையில் மூழ்கி விடுவார்கள் அல்லது வேறு ஏதாவது விசயம் நடக்கும் போது துணையாக இருப்பவரது எண்ணமே இருக்காது, விசயங்களில் மூழ்கி விடுவர். அதே போன்று துணையாக இருக்கின்றார் என்பதை ஏற்றுக் கொள்கிறீர்கள், அனுபவமும் செய்கிறீர்கள். துணையாக இல்லை என்று கூறுபவர்கள் யாராவது இருக்கிறீர்களா? யாரும் கிடையாது. என் கூடவே இருக்கின்றார் என்று அனைவரும் கூறுகிறீர்கள். உனக்குத் துணையாக இருக்கிறார் என்றும் கூறுவது கிடையாது. என் கூடவே இருக்கின்றார் என்று ஒவ்வொருவரும் கூறுகிறீர்கள். மனதார கூறுகிறீர்களா? அல்லது வாயினால் மட்டும் கூறுகிறீர்களா? மனதார கூறுகிறீர்களா?

பாப்தாதா விளையாட்டை பார்க்கின்றார், தந்தை துணையாக அமர்ந்திருக்கின்றார், ஆனால் தனது பிரச்சனைகளில், அதை எதிர்கொள்வதில் அந்த அளவிற்கு மூழ்கி விடுகிறீர்கள் என் கூட யார் இருக்கிறார் என்று பார்ப்பது கூட கிடையாது. பிறகு தந்தையும் என்ன செய்வார்? தந்தையும் துணையி-ருந்து விலகி சாட்சியாகி விளையாட்டை பார்க்கின்றார். இவ்வாறு செய்ய வேண்டாம் தானே! துணையாக இருக்கின்றார் என்று கூறுகிறீர்கள் எனில் துணையை பயன்படுத்துங்கள், ஏன் தூரமாக்குகிறீர்கள்? இது தந்தைக்கு பிடிக்கவில்லை. ஒவ்வொரு குழந்தையும் சுயஇராஜ்ய அதிகாரி மற்றும் விஸ்வ அதிகாரி ஆக வேண்டும் என்ஹ சுப ஆசை தான் தந்தை வைக்கின்றார், நீங்கள் பிரஜைகளா என்ன? பிரஜைகளாக ஆக்க் கூடாது தானே? இராஜாக்கள், மகாராஜாக்கள், உலக மகாராஜாக்கள் அல்லவா! பிரஜைகளை உருவாக்கக் கூடியவர்கள், பிரஜைகளாக ஆகக் கூடியவர்கள் அல்ல. இராஜா ஆகக் கூடிய வர்கள், பிரஜைகளை உருவாக்கக் கூடியவர்கள். ஆக இராஜாக்கள் எங்கு அமருவார்கள்? சிம்மாசனத்தில் அமருவார்கள் அல்லவா! நடைமுறையில் இராஜா என்ற போதையில் இருக்கும் போது சிம்மாசனத்தில் அமருவார் அல்லவா! எனவே சாட்சி என்ற சிம்மாசனத்தை விட்டு விடாதீர்கள். தனித் தனியான முயற்சி செய்யும் போது அதில் களைப் படைந்து விடுகிறீர்கள். இன்று மனதினால் செய்தேன், நேற்று வார்த்தைகளினால் செய்தேன், சம்பந்தம்-தொடர்பினால் செய்தேன் எனும் போது களைப்படைந்து விடுகிறீர்கள். ஒரே ஒரு முயற்சி செய்யுங்கள் - சாட்சி மற்றும் குஷி என்ற சிம்மாசனதாரியாக இருக்க வேண்டும். இந்த சிம்மாசனத்தை ஒருபோதும் விட்டு விடக்கூடாது. சில இராஜாக்கள் மிகவும் சீரியஸாக சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பர். அமர்ந்திருப்பது சிம்மாசனத்தில் தான், ஆனால் மிகவும் கோபக் காரராக, அதிகாரியாக இருந்தால் நன்றாக இருக்குமா? இவர் இராஜா கிடையாது என்று கூறுவர். ஆக

நீங்கள் சதா சிம்மாசனதாரிகள் தானே! அந்த இராஜா சில நேரம் சிம்மாசனத்தில் அமர்வார், சில நேரம் அமர மாட்டார். ஆனால் சாட்சி என்ற சிம்மாசனம் அப்படிப்பட்டது, எந்த ஒரு காரியம் செய்தாலும் சிம்மாசனத்திலேயே செய்யலாம், கீழே இறங்க வேண்டியதில்லை. உறங்கினாலும் சிம்மாசனத்தில், எழுந்தாலும்-அமர்ந்தாலும், சம்பந்தம்-தொடர்பில் வந்தாலும் சிம்மாசனத்திலேயே இருக்கலாம். சிம்மாசனத்தில் அமர முடிகிறதா? அல்லது அமர முடியவில்லையா? கீழே விழுந்து விடுகிறீர்களா? சாட்சி என்ற சிம்மாசனதாரி ஆத்மா ஒருபோதும் எந்த ஒரு பிரச்சனையிலும் குழப்பமடைய முடியாது. பிரச்சனை சிம்மாசனத்தின் கீழே சென்று விடும். நீங்கள் மேலே சிம்மாசனதாரியாக இருப்பீர்கள். பிரச்சனைகள் உங்களை தலைதூக்கிப் பார்க்க முடியாது, கீழே அடங்கி இருக்கும். உங்களை குழப்பத்தில் கொண்டு வராது, ஏதாவது ஒன்றை நன்றாக அமுக்கி வைக்கும் போது அது உள்ளுக்குள் இறந்து விடும் அல்லவா! பாப்தாதாவிற்கு அப்படிப்பட்ட நேரத்தில் ஆச்சரியமாக இருக்கிறது, நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம். தன்மீது செய்யுங்கள், மற்றவர்கள் மீது ஆச்சரியப்படாதீர்கள். என்னுடைய குழந்தை என்ன செய்து கொண்டிருக்கிறது? என்று ஆச்சரியமாக இருக்கிறது. சிம்மாசனத்தை விட்டு இறங்கிக் கொண்டிருக்கிறது. சிம்மாசன தாரிக்கான சன்ஸ்காரம் இப்பொழுதி-ருந்தே கொண்டு வரும் போது தான் விஸ்வ சிம்மாசனத்திலும் அமர முடியும். இங்கு சதா கால சிம்மாசனதாரியாக இல்லையெனில் அங்கும் சதா அதாவது எவ்வளவு காலம் இல்லையோ அவ்வளவு காலம் அமர முடியாது. இப்பொழுதே சன்ஸ்காரத்தை நிரப்பிக் கொள்ள வேண்டும். பிறகு நிரப்பியிருக்கும் அதே சன்ஸ்காரம் தான் சத்யுகத்தில் காரியம் செய்யும். ராயல்டிக்கான சன்ஸ்காரம் இப்பொழுதி-ருந்தே நிரப்பிக் கொள்ள வேண்டும். இன்னும் சில காலம் இருக்கிறது, சீக்கிரம் விநாசம் ஆகிவிடாது என்று யோசிக் காதீர்கள். விநாசம் திடீரென்று ஏற்படும். தயாராக இருக்கிறீர்களா? என்று கேட்டுக் கொண்டு வராது. அனைத்தும் திடீரென்று நடக்கும். நீங்களும் பிராமணர்களாக எப்படி ஆனீர்கள்? திடீரென்று செய்தி கிடைத்தது, கண்காட்சி பார்த்தீர்கள், சம்பந்தம்-தொடர்பு ஏற்பட்டது, மாறி விட்டீர்கள். இந்த தேதியில் பிராமணனாக ஆவேன் என்று யோசித்தீர்களா என்ன? திடீரென்று ஏற்பட்டு விட்டது அல்லவா! எனவே மாற்றமும் திடீரென்று தான் ஏற்படும். உங்களை மாயை முத-ல் அதிக அலட்சிய முடையவர்களாக ஆக்கும். எந்த ஒரு விசயத்திலும், அது சேவை ஆக, யோகா, தாரணை, சம்பந்தம்-தொடர்பில் இது நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கும், இவ்வாறு ஏற்படத் தான் செய்யும் இவ்வாறு மாயை முத-ல் அலட்சியம் ஆக்குவதற்கு முயற்சி செய்யும். பிறகு திடீரென்று விநாசம் ஏற்பட்டு விடும். பிறகு பாப்தாதா கூறவேயில்லை, இவ்வாறு நடக்குமா என்ன? என்று சொல்லக் கூடாது. ஆகையால் முன் கூட்டியே கூறி விடுகின்றேன் - எந்த ஒரு விசயத்திலும் ஒருபோதும் அலட்சியமாக இருந்து விடாதீர்கள். நான்கு பாடங்களிலும் எச்சரிக்கையுடன் இருங்கள். இப்போதே ஏதாவது நடந்து விட்டாலும் எச்சரிக்கையுடன் இருங்கள். அந்த நேரத்தில் பாப்தாதா வாரு:ங்கள், இப்பொழுது துணையாக இருங்கள், இப்பொழுது சிறிது சக்தி கொடுங்கள், அந்த நேரத்தில் கொடுக்க மாட்டேன். இப்பொழுது எவ்வளவு சக்தி தேவையோ சேமித்துக் கொள்ளுங்கள். அனைவருக்கும் திறந்த அனுமதி இருக்கிறது, திறந்த பொக்கிஷமாகும். எவ்வளவு சக்தி தேவையோ, எந்த சக்தி தேவையோ எடுத்துக் கொள்ளுங்கள்.

பரிட்சைக்கான நேரத்தில் ஆசிரியர் அல்லது பிரின்சிபல் உதவி செய்யமாட்டார்.

இரட்டை அயல்நாட்டினர்களைப் பார்த்து தந்தைக்கும் இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஏன் ஏற்படுகிறது? ஏனெனில் இரட்டை அயல்நாட்டினருக்கு தன்னை மாற்றிக் கொள்வதில் இரட்டை முயற்சி செய்ய வேண்டியிருக்கிறது. ஆகையால் எப்பொழுது பாப்தாதா இரட்டை அயல்நாட்டுக் குழந்தைகளை பார்க்கின்றாரோ இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகின்றார் - ஆஹா எனது இரட்டை அயல்நாட்டுக் குழந்தைகளே ஆஹா! இரட்டை அயல்நாட்டினர்கள் கைகளை உயர்த்துங்கள். (உலகின் பல தேசங்களி-ருந்து ஆயிரம் சகோதர, சகோதரிகள் சபையில் அமர்ந்திருக் கின்றனர்) ஆஹா மிகவும் நல்லது. இரண்டு மடங்கு கை தட்டுங்கள். பாப்தாதா அயல்நாட்டு சேவை செய்திகளை கேட்டுக் கொண்டு இருக்கின்றார், பார்த்துக் கொண்டும் இருக்கின்றார். சேவையில் ஆர்வம்-உற்சாகம் மிக நன்றாக இருக்கிறது. அவ்வப்பொழுது சேவைக்கான சிறிது சுமையை தன் மீது சுமந்து கொள்கிறீர்கள். சுமை தூக்காதீர்கள். சுமையை தந்தையிடம் கொடுத்து விடுங்கள். தந்தைக்கு அந்த சுமை ஒன்றுமே கிடையாது. ஆனால் நீங்கள் சேவைக்கான சுமை எடுத்துக் கொள்வதால் களைப்படைந்து விடுகிறீர்கள். சேவை மிகவும் நன்றாக செய்கிறீர்கள், சேவைக்கான நேரத்தில் களைப்படைவது கிடையாது. அந்த நேரத்தில் மிக நல்ல முகம் போட்டோ எடுக்கக் கூடியதாக இருக்கிறது. ஆனால் சிலர் அவ்வப்பொழுது சேவைக்குப் பிறகு சிறிது களைப்படைந்த முகத்துடன் தென்படுகின்றனர். தந்தை கூறுகின்றார் - ஏன் சுமைகளை சுமக்கிறீர்கள்? சுமைகள் தூக்குவதற்கு பிடிக்கின்றதா? அல்லது பழக்கமாகி விட்டதா? சுமைகளை சுமைக்காதீர்கள். தந்தை துணையாக இல்லை எனும் போது தான் சுமையாக இருக்கும். நான் செய்தேன், நான் செய் கின்றேன் எனும் போது சுமை ஏற்பட்டு விடுகிறது. தந்தை துணையாக இருக்கின்றார், தந்தையின் காரியம், தந்தை செய்வித்துக் கொண்டிருக்கின்றார் எனில் சுமை இருக்காது. இலேசாகி ஆடிக் கொண்டே இருப்பீர்கள். நடனம் மிக நன்றாக செய்வீர்கள் அல்லவா! இரட்டை அயல்நாட்டினர் களின் நடனத்தைப் பாருங்கள் மிகவும் நன்றாக இருக்கும். தன்னை களைப்படையச் செய்வது கிடையாது. பரிஸ்தா போன்று செய்வர். இந்திரியர்களின் நடனம் கால்களை களைப்படையச் செய்து விடும், கைகளை களைப்படையச் செய்து விடும். ஆனால் அயல்நாட்டினர்களில் நடனமும் இலேசாக செய்வர். அதே போன்று சேவையையும் ஒரு நடனம் என்று புரிந்து கொள்ளுங்கள், விளையாட்டு என்று புரிந்து கொள்ளுங்கள். களைப்படையாதீர்கள். பாப்தாதாவிற்கு அந்த போட்டோ பிடிக்கவில்லை. சேவைக்கான ஆர்வம்-உற்சாகம் நன்றாக இருக்கிறது. இந்த முடிவும் தந்தையிடம் இருக்கிறது - இப்பொழுது சிறிய விசயத்திற்கு குழப்பத்தில் வரக் கூடிய சதவிகிதம் மிகவும் குறைந்து விட்டது. மெஜாரிட்டி நன்றாக இருக்கிறீர்கள், பாக்கி சிலர் அவ்வப்பொழுது சிறிது குழப்பத்தில் இருப்பது தென்படுகிறது. ஆனால் ஆரம்பத்தி-ருந்த முடிவிற்கும், இப்போதைய முடிவிற்கும் மிக நன்றாக வித்தியாசம் இருக்கிறது. இவ்வாறு தென்படுகிறது தானே? இப்பொழுது நாசூக்கான நிலையை விட்டுக் கொண்டே செல்கிறீர்கள். முடிவைப் பார்த்து பாப்தாதாவிற்கு குஷி ஏற்படுகிறது.

இப்பொழுது சிறிய சிறிய மைக்கைவும் தயார் செய்து கொண்டிருக்கிறீர்கள். இப்போது சிறிய மைக்காக இருக்கிறது, ஆனால் சிறியதி-ருந்து பெரிய மைக்

வரை வந்து விடும். பாப்தாதாவிற்கு நினைவிருக்கிறது - ஆரம்பத்தில் அயல்நாட்டு ஆசிரியைகள் கூறுவர் - வி.ஐ.பி களை சந்திப்பது சிரமமாக இருக்கிறது, வரவைப்பதை விட்டு விடுங்கள், சந்திப்பதே சிரமம். ஆனால் இப்போது எளிதாகி விட்டது. ஏனெனில் நீங்களும் வி.வி.வி.ஐ.பி ஆகிவிட்டீர்கள். உங்கள் முன் வி.ஐ.பி கள் ஒன்றும் கிடையாது. மொத்ததில் அயல்நாடின் ரிசல்ட் நன்றாக இருக்கிறது. சேவை நிலையங்களும் நன்றாக இருக்கிறது, விருத்தி அடைந்து கொண்டிருக்கிறது. பாரதத்தில் கைகள் (ஹேன்ட்ஸ்) இல்லை, இல்லையெனில் பாரதத்திலும் அதிக சேவை நிலையங்கள் திறக்கப்பட்டு விடும். ஒவ்வொரு மண்டலத்தினரும் கைகள் இல்லை என்று கூறுகின்றனர். எனவே இப்பொழுது இந்த ஆண்டு கைகளை உருவாக்கும் சேவை செய்யுங்கள். கைகளை கேட்காதீர்கள், உருவாக்குங் கள், அதிகப்படியாக தானம்-புண்ணியம் செய்யுங்கள்.

அயல்நாட்டில் இந்த ஒரு நல்ல முறை இருக்கிறது - எங்கு சேவை நிலையம் திறந்தாலும் அங்கேயே லௌகீக வேலையும் செய்வர், சேவை நிலையத்தையும் கவனித்துக் கொள்வர். யார் நடத்துவார்கள்? எப்படி நடத்துவது? என்ற பிரச்சனை குறைவு. நான் ஏன் லௌகீக வேலை செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைக்காதீர்கள். இது உங்களது சேவைக்கான சாதனமாகும். லௌகீக வேலை செய்யவில்லை, ஆனால் அலௌகீக காரியத்திற்கு நிமித்தம் ஆவதற்காக லௌகீக வேலை செய்கிறீர்கள். எங்கு சென்றாலும் அங்கு சேவை நிலையம் திறப்பதற்கான ஆர்வம் இருக்கிறது அல்லவா! ஆக லௌகீக வேலை எவ்வளவு காலம் செய்வது என்று யோசிக்காதீர்கள். லௌகீக வேலை அலௌகீக காரியத்தின் பொருட்டு செய்கிறீர்கள் எனில் நீங்களும் சமர்ப்பனம் ஆனவர்கள் தான். லௌகீகத் தன்மை இருக்கக் கூடாது, அலௌகீக நிலை இருக்க வேண்டும். லௌகீக காரியத்திலும் சமர்ப்பனமாக இருக்கிறீர்கள். லௌகீக வேலையை விட்டு விட்டு சம்பூர்ன சமர்பன விழா கொண்டாட வேண்டும் என்ற விசயம் கிடையாது. இப்படி செய்தால் பிறகு எப்படி விருத்தி ஆகும். ஆகையால் லௌகீக காரியம் செய்தாலும் அலௌகீக காரியத்திற்கு நிமித்தமாக ஆகிறீர்கள். ஆக யார் லௌகீகத்திற்கு நிமித்தம் என்று புரிந்து கொள்கிறார்களோ, அலௌகீக நிலையில் இருக்கிறார்களோ - அப்படிப்பட்ட ஆத்மாக்களுக்கு இரண்டு மடங்கு மட்டுமின்றி பல மடங்கு வாழ்த்துக்கள். டிரஸ்டியாகி செய்தால் போதும், நான் என்பதில் வரக் கூடாது. நான் இவ்வளவு காரியங்கள் செய்கிறேன், நான் என்பது கூடாது. செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கின்றார். நான் கருவியாக இருக்கின்றேன். சக்தியின் ஆதாரத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நல்லது.

இன்று இரட்டை அயல்நாட்டினர்களின் முறையாகும். உங்களுக்கும் இரட்டை அயல்நாட்டினர் களைப் பார்த்து குஷி ஏற்படுகிறது அல்லவா! ஆக அனைத்து இரட்டை அயல்நாட்டினர்களும் குஷியாக இருக்கிறீர்களா? கை தட்டுங்கள். இப்பொழுது மதுவத்தில் மாயை வருவது கிடையாது தானே?

நல்லது, ஒரு விநாடியில் முற்றிலுமாக தந்தைக்குச் சன்ம் அசரீரியாக ஆகிவிட முடியுமா? ஒரு விநாடியில் முற்றுப் புள்ளி வையுங்கள் மற்றும் அசரீரி ஸ்திதியில் நிலைத்து விடுங்கள். (பாப்தாதா 3 நிமிடங்கள் டிரில் செய்வித்தார்)

நல்லது, இந்த பயிற்சி முழு நாளும் அடிக்கடி செய்து கொண்டே இருங்கள்.

நாலாபுறங்களிலும் உள்ள அனைத்து மாயாஜீத், இயற்கையை வென்றவர்கள், சாட்சி என்ற சிம்மாசனதாரிகள், துணைவனின் துணையை சதா அனுபவம் செய்யக் கூடியவர்கள், சதா உறுதித்தன்மையின் மூலம் வெற்றியை கழுத்து மாலையாக ஆக்கக் கூடியவர்கள், சதா தந்தைக்குச் சன்ம் லைட்டாக இருக்கக் கூடியவர்கள், சதா தனது சக்தியின் மூலம் உலகின் துக்கம்-அசாந்தி என்ற பலவீனங்களை தூரமாக்கக் கூடியவர்கள், இப்படிப்பட்ட மாஸ்டர் சுகக் கடல், குஷிக்கடல், அன்புக்கடல், ஞானக்கடல் தந்தைக்குச் சமமான குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

வரதானம் : கண்டறியும் மற்றும் நிர்ணயிக்கும் சக்தியின் மூலம் சேவையில் வெற்றியை பலனாக அடையக் கூடிய வெற்றி மூர்த்தி ஆகுக.

யார் கண்டறியும் சக்தியின் மூலம் தந்தையை, தன்னை, நேரத்தை, பிராமணக் குடும்பத்தை மற்றும் தனது சிரேஷ்ட கடமையை அறிந்து கொண்டு பிறகு என்ன ஆக வேண்டும்? என்ன செய்ய வேண்டும்? என்று நிர்ணயம் செய்கிறார்களோ அவர்கள் அதே சேவை செய்வார்கள், கர்மம் அல்லது சம்பந்தம் தொடர்பில் வந்தாலும் சதா வெற்றியை பிராப்தியாக அடைவார்கள். எண்ணம்-சொல்-செயல் ஒவ்வொரு விதமான சேவையிலும் வெற்றி மூர்த்தி ஆவதற்கான ஆதாரம் கண்டறியும் மற்றும் நிர்ணயிக்கும் சக்தியாகும்.

சுலோகன்: ஞானம், யோகம் லைட் மைட்டினால் சம்பன்னம் ஆகின்ற போது எந்த ஒரு பிரச்சனையையும் விநாடியில் கடந்து விடுவீர்கள்.